ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2315/27 - 2023 ජනවාරි මස 18 වැනි බදාදා - 2023.01.18

2315/27 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 18 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டம் (262 ஆம் அத்தியாயம்)

### 76அ ஆம் பிரிவின் கீழான கட்டளை

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 39ஆ ஆம் பிரிவில் குறிப்பிடப்படும் விடயங்களுக்கு மேலதிகமாக, அஞ்சல் வாக்காளரொருவராகக் கணிக்கப்படும் பொருட்டு தேர்தலுக்காக அவர்களின் பணிகள் அத்தியாவசியமானதாக இருப்பதனால், தேர்தல் தினத்தன்று அத்தியாவசிய கடமைகளில் ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் கீழ்க்காணும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களின் மட்டுப்படுத்திய அலுவலர்களையும் ஊழியர்களையும் உட்படுத்துவதற்கு உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 76அ ஆம் பிரிவிற்கமைய தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பின்பற்றி இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.

**நிமல் ஜீ. புஞ்சிஹேவா,**
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

**எஸ். பி. திவாரத்ன,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

**எம். எம். மொஹமட்,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

**கே. பீ. பீ. பத்திரண,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

**பீ. எஸ். எம். சார்ள்ஸ்,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2023, சனவரி 17.

1A - G 38621 — 16 (2023/01)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

## அட்டவணை

1. இலங்கை மகாவலி அதிகாரசபையின் மகாவலி பாதுகாப்பு அணியினால் 24 மணி நேரத்தையும் உள்ளடக்குகின்ற வகையில் பாதுகாப்பு வழங்கப்படுகின்ற விக்டோரியா நீர்த்தேக்கம், பொல்கொல்ல நீர்த்தேக்கம், ரன்தெனிகல நீர்த்தேக்கம், கொத்மலை நீர்த்தேக்கம், கலா வாவி, உடவளவை நீர்த்தேக்கம், போவதென்ன நீர்த்தேக்கம், மாதுறுஓய நீர்த்தேக்கம், உல்ஹிட்டிய/ரத்கிந்த நீர்த்தேக்கம், களுகங்கை நீர்த்தேக்கம், தம்புளுஓய, கண்டலம மற்றும் மொரகஹகந்த நீர்த்தேக்கம், பதுளுஓய நீர்த்தேக்கங்கள்/ அணைக்கட்டுக்கள் போன்ற இடங்களில் கடமையில் ஈடுபடுத்தப்படுகின்ற ஊழியர்கள்;

2. இலங்கை மின்சார சபையினால் 24 மணி நேரமும் தொடர்ச்சியாக மின்சாரம் வழங்கப்பட வேண்டிய கொழும்பு நகரின் முக்கிய பொருளாதார மையங்களான துறைமுகம் மற்றும் பிரபுக்களின் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள், பிரதான அரச நிறுவனங்கள், பிரதான ஊடக நிறுவனங்களான ரூபவாஹினி கூட்டுத்தாபனம், ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், பிரதான வாக்கெண்ணும் நிலையங்கள் மற்றும் வாக்கெடுப்பு நிலையங்கள் என்பவற்றிக்கு சேவையை வழங்க வேண்டியிருப்பதனால், அத்தகைய அத்தியாவசிய சேவையை நிறைவேற்றும் இலங்கை மின்சார சபையின் மின் உற்பத்தி நிலையங்களிலும் பரிமாற்றல் நிலையங்களிலும் பராமரிப்பு நிலையங்களிலும் பணிபுரிகின்ற ஊழியர்கள்;

3. வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் 24 மணி நேரமும் தொடர்ச்சியாக சேவை வழங்கப்பட வேண்டிய அதிவேகப் பாதையின் நுழைவாயில்களிலும் பராமரிப்புப் பிரிவிலும் பணிபுரிகின்ற ஊழியர்கள்;

4. ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்தில் 24 மணி நேரமும் தொடர்ச்சியாக சேவையை வழங்க வேண்டிய தொடர்பு நிலையங்களில் பணிபுரிகின்ற ஊழியர்கள்;

5. சிலோன் பெற்றோலியம் ஸ்ரோறேஜ் டேர்மினல் நிறுவனத்தின் எரிபொருள் களஞ்சியசாலைகள் அமைந்துள்ள கொலொன்னாவை, முத்துராஜவெல ஆகிய இடங்களில் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுகின்ற ஊழியர்கள்;

6. இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தேர்தல் தின ஒளி/ஒலிபரப்பு அலுவல்களில் ஈடுபடுகின்ற ஊழியர்கள்;

7. சிறைச்சாலைத் திணைக்களத்தின் அலுவலர்களும் ஊழியர்களும்.

EOG 01 -0192

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.